**பெருநகர சென்னை மாநகராட்சி**

**செய்தி வெளியீடு**

**தே.செ.வெ.எண். 77** **நாள்: 10.04.2026**

**தமிழ்நாடு சட்டமன்றப் பொதுத்தேர்தல், 2026-னை முன்னிட்டு, சென்னை மாவட்டத்திற்குட்பட்ட 16 சட்டமன்றத் தொகுதிகளில் பயன்படுத்தப்படவுள்ள மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களுக்கான (Ballot Unit) முதல் துணை சமவாய்ப்பிற்கு உட்படுத்தும் நிகழ்வு (First supplementary Randomization) மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாநகராட்சி ஆணையர் திரு.ஜெ.குமரகுருபரன், இ.ஆ.ப., தலைமையில் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் முன்னிலையில் இன்று நடைபெற்றது.**

இந்திய தேர்தல் ஆணையத்தின் உத்தரவின்படி, தமிழ்நாடு சட்டமன்றப் பொதுத்தேர்தல், 2026-னை முன்னிட் , சென்னை மாவட்டத்திற்குட்பட்ட 16 சட்டமன்றத் தொகுதிகளில் கூடுதலாக பயன்படுத்தப்படவுள்ள மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களுக்கான (Ballot Unit) முதல் துணை சமவாய்ப்பிற்கு உட்படுத்தும் நிகழ்வு (First supplementary Randomization) மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாநகராட்சி ஆணையர் திரு.ஜெ.குமரகுருபரன், இ.ஆ.ப., தலைமையில் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் முன்னிலையில் ரிப்பன் கட்டட வளாகக் கூட்டரங்கில் இன்று (10.04.2026) நடைபெற்றது.

சென்னை மாவட்டத்திற்குட்பட்ட 16 சட்டமன்றத் தொகுதிகளுக்கான மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் மற்றும் வாக்காளர் தங்களது வாக்கினை சரிபார்க்கும் (VVPAT) இயந்திரங்களின் முதல் நிலை சரிபார்த்தல் (FLC) பணியானது 11.12.2025 அன்று தொடங்கி 13.01.2026 வரை நடைபெற்றது.

இதனைத் தொடர்ந்து, சென்னை மாவட்டத்தில் 16 சட்டமன்றத் தொகுதிகளுக்கு ஒதுக்கப்பட்ட மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் மற்றும் வாக்காளர் தங்களது வாக்கினை சரிபார்க்கும் (VVPAT) இயந்திரங்களின் முதல் சமவாய்ப்பிற்கு உட்படுத்தும் நிகழ்வு 23.03.2026 அன்று நடைபெற்றது. இதில் 4,889 மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள், 4,889 கட்டுப்பாட்டுக் கருவிகள் மற்றும் 5,295 வாக்காளர் தான் செலுத்திய வாக்கினை சரிபார்க்கும் இயந்திரங்கள் சட்டமன்றத் தொகுதி வாரியாக அனுப்பி வைக்கப்பட்டது.

சென்னை மாவட்டத்திற்குட்பட்ட 16 சட்டமன்றத் தொகுதிகளுக்கான வேட்புமனுத்தாக்கல் நிறைவு பெற்று சட்டமன்றத் தொகுதி வாரியாக போட்டியிடும் வேட்பாளர் எண்ணிக்கை அடிப்படையில் கூடுதலாக மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் (Ballot Unit) தேவைப்படும் சட்டமன்றத் தொகுதிகளுக்கான துணை சமவாய்ப்பிற்கு உட்படுத்தும் நிகழ்வு (Supplementary Randomization) கணினி

குலுக்கல் முறையில் சுழற்சிக்கு உட்படுத்தும் நிகழ்வு (Randomization) இன்று (10.04.2026) நடைபெற்றது.

இந்நிகழ்வில், கூடுதல் மாவட்ட தேர்தல் அலுவலர்/இணை ஆணையாளர் (கல்வி) திருமதி க. கற்பகம், இ.ஆ.ப., மாவட்ட வருவாய் அலுவலர் (தேர்தல்), அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் மற்றும் தேர்தல் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**"தேர்தல் திருவிழா – தமிழ்நாட்டின் பெருவிழா"**

**செய்தி வெளியீடு : இணை இயக்குநர்/மக்கள் தொடர்பு அலுவலர்,**
**பெருநகர சென்னை மாநகராட்சி**

**சென்னை மாவட்டத்தில் 16 சட்டமன்றத் தொகுதிகளுக்கும் குலுக்கல் முறையில் தேர்வு செய்யப்பட்ட துணை சமவாய்ப்பிற்கு உட்படுத்தப்பட்ட மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களின் விவரம் :**

| வ. எண் | சட்டமன்றத் தொகுதி | வாக்குச்சாவடி மையங்கள் | ஏற்கனவே சட்டமன்றத் தொகுதி வாரியாக வழங்கப்பட்ட மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் (20% கையிருப்பு உட்பட) | துணை சமவாய்ப்பிற்கு உட்படுத்தப்பட்ட மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் (20% கையிருப்பு உட்பட) | மொத்த மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் |
|---|---|---|---|---|---|
| 1. | எண்.11 டாக்டர் இராதாகிருஷ்ணன் நகர் | 247 | 295 | 591 | 886 |
| 2. | எண்.12 பெரம்பூர் | 298 | 357 | 714 | 1071 |
| 3. | எண்.13 கொளத்தூர் | 286 | 343 | 686 | 1029 |
| 4. | எண்.14 வில்லிவாக்கம் | 255 | 306 | 306 | 612 |
| 5. | எண்.15 திரு.வி.க. நகர் (தனி) | 226 | 267 | 271 | 538 |
| 6. | எண்.16 எழும்பூர் (தனி) | 200 | 240 | 240 | 480 |
| 7. | எண்.17 இராயபுரம் | 194 | 232 | 232 | 464 |
| 8. | எண்.18 துறைமுகம் | 192 | 230 | 230 | 460 |
| 9. | எண்.19 சேப்பாக்கம் – திருவல்லிக்கேணி | 235 | 282 | 282 | 564 |
| 10. | எண்.20 ஆயிரம் விளக்கு | 247 | 296 | 296 | 592 |
| 11. | எண்.21 அண்ணா நகர் | 273 | 327 | 327 | 654 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 12. | எண்.22 விருகம்பாக்கம் | 311 | 373 | 373 | 746 |
| 13. | எண்.23 சைதாப்பேட்டை | 282 | 338 | 0 | 338 |
| 14. | எண்.24 தியாகராயநகர் | 251 | 301 | 301 | 602 |
| 15. | எண்.25 மயிலாப்பூர் | 273 | 326 | 327 | 653 |
| 16. | எண்.26 வேளச்சேரி | 315 | 376 | 378 | 754 |
| **மொத்தம்** | | 4085 | 4889 | 5554 | 10,443 |